1975 எப்ரல் 10]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குடுமியான்மலே அண்ணு பண்ணையிலே டிராக்டர் பழுதுபார்க்கும் திட்டம் ஆரம்பிக்கிற முயற்சி கைவிடப் பட்டுவிட்டதா ? கைவிடப்பட்டது என்ருல் அதை மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கேள்வி டிராக்டர் ரிப்பேர் சென்டர் பற்றி அல்ல, சர்வீஸ் சென்டர் பற்றித்தான், அந்த ஆலோசனை தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. தி. பொன்னுமலே : சேலத்தில் கல்வராயன்மலே, சேர்வராயன் மலே இவற்றைத் தவிர ஏர்க்காடு. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கேள்வி 628-ல் வருகிறது. இந்தக் கேள்வியில் அல்ல.

Development of Horticulture

*628 Q.—Thiru N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether there is any proposal to introduce a crash programme for the Development of Horticulture in Kalrayan and Kolli Hills and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) : கிராஷ் புரோகிராம் அதாவது தீவிரத் திட்டம் இல்லே.

திரு. என். கே. பழனிசாமி : சார், அந்தப் பகுதியில் காபித் தோட்டங்களும் டீ தோட்டங்களும் வைப்பதற்கு வசதியிருக்கிறதா ? அதைப்பற்றி ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறதா ? அதன் முடிவு என்ன ? சர்க்கார் என்ன முடிவு செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : காபித் தோட்டங்களும், டீ தோட்டங்களும் இந்த ஹார்டிகல்சர் என்ற குறிப்பிலே வரவில்லே. அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

திரு. தி. பொன்னுமலே : கல்வராயன்மலே, சேர்வராயன்மலே, ஏர்க்காடு இவற்றைத் தவிர கொல்லிமலே சிறந்த இடம், நீரூற்று உள்ள இடம், அங்கே ஆராய்ச்சிகள் நடத்தி விவசாயம் முன்னேற ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கொல்லி மலைப்பற்றி நான் சொன்னேன். கிராஷ் புரோகிராம், தீவிர திட்டம் இல்லை என்று சொன்னேன். அங்கே ஒரு 200 ஏக்கர் தோட்டக் கலை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டு நிதி உதவி கொல்லிமலையில் உள்ள பழங்குடி மக்களின் நன்மைக்காக உரம் பாதி விலையிலும், பூச்சி கொல்லி மருந்து 10 சதவீதம் விலை குறைவிலும் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கொல்லிமலை பற்றியது. உதக மண்டலம், ஒசூர் பற்றியெல்லாம் கேள்விகள் வரக்கூடாது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether he will arrange for a crash programme for horticulture development in Tamil Nadu since there is great export potential?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கிராஷ் புரோகிராம் என்ற அளவில் தீவிரத் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. அதற்கான செயற்குறிப்பு இல்லை.

புதிய போக்குவரத்துக் கழகம்

*629. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

திருச்சி-புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு தனி போக்குவரத்துக் கழகம் அமைத்திட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

எளாவூர் – அம்பத்தூர் பேருந்துப்பணி

*630 வினா--திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம் எளாவூரிலிருந்து கும்முடிப்பூண்டி, செங்குன்றம், புழல் வழியே அம்பத்தூர் வரை பேருந்து விடும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன் ?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) எளாவூரிலிருந்து கும்முடிப்பூண்டி, செங்குன்றம், புழல் வழியே அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை பேருந்து விடும் செயற்குறிப்பு எதுமில்லை.